நான்காம் தமிழ்ச்சங்கத்தேர்வு 2019-2020

தமிழ்த்தேர்வு

பத்தாம் வகுப்பு – பொதுத் தேர்வு

பதிவெண்: 010593

மொத்த மதிப்பெண்கள் : 100

ம்: 3.00 மணி

வுரைகள்:(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

ப்புகள் : (1) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

(2) வினா எண் 21 மற்றும் 49க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்

## பகுதி – I

ப்புகள் : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத்தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

(மதிப்பெண்கள் : 15) 15x1=15

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை…………

   அ) குலை வகை ஆ) மணிவகை இ) கொழுந்து ஈ) இலை வகை

2. பொருத்துக:

   அ) கொண்டல் - 1. மேற்கு

   ஆ) கோடை - 2. தெற்கு

   இ) வாடை - 3. கிழக்கு

   ஈ) தென்றல் - 4. வடக்கு

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய தொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ………..

   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. பாரத் ஸ்டேட் வங்கியின் உரையாடும் மென் பொருள் எது?

   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5. ‘அருந்துணை’ – என்பதைப் பிரித்ததால் ……….

   அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அருந்+துணை

6. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ……….

   இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் …………

   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

7. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடு.

   அ) உழவர், மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவர்

   இ) உழவர், ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மான்

8. கலையின் கணவனாக, சமுதாயத்தின் புதல்வனாக இருந்து எழுதுகிறேன். - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது ………….

   அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கவிதையாக்கினார்

   ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

   இ) அறத்தைக் கூற எழுதினார்.

   ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

9. செய்தி 1 – ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 13-ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடம் வகிக்கிறது என் பெருமையே!

செய்தி 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

அ) செய்தி 1 – மட்டும் சரி ஆ) செய்தி 1,2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1,3 ஆகியன சரி

10. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று

வழிப் போக்கர் கேட்பது ………….. வினா.

'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறுவது ……….. விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவினா

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (11, 12, 13, 14)

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று".

11. இப்பாடல் இடம்பெற்ற நூல் :

அ) தேம்பாவணி ஆ) நீதிவெண்பா இ) காசிக்காண்டம் ஈ) சிலப்பதிகாரம்

12. ஆவி ……… இச்சொல்லின் பொருள் :

அ) அன்பு ஆ) உயிர் இ) அறிவு ஈ) நீராவி

13. மயக்கம் அகற்றுவது எது?

அ) அறிவு ஆ) மருந்து இ) கல்வி ஈ) மூன்றும்

14. 'அருத்துவது – என்ற சீரின் வாய்ப்பாடு'

அ) கருவிளங்காய் ஆ) புளிமாங்காய் இ) கருவிளம் ஈ) மலர்

15. Philosopher, Revivalism - இவற்றின் கலைச் சொற்கள்

அ) தத்துவம், மீட்சி ஆ) மெய்யியலாளர் மீட்டுருவாக்கம்

இ) மீத்திறம், ஞானி ஈ) மேதை, மீகாமன்

## பகுதி – II

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **4x2=8**

(21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

17. கழிந்த பெரும் கேள்வியினான் யார்?

காதல் மிகு கேண்மையினான் யார்?

18. வசன கவிதை – குறிப்பு எழுதுக.

19. கும்ப கர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்?

அவனை எங்கு உறங்கச் சொல்கிறார்கள்?

20. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

21. 'குன்றேறி' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.** **5x2=10**

22. பாரதியார் கவிஞர். நூலகம் சென்றார். அவர் யார்?

இத்தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் எவை?

23. வினை முற்றை வினையாலணையும் பெயராக்குக

(1) நேற்று என்னைச் சந்தித்தார்; அவர் என் நண்பர்.

(2) ஊட்டமிகு உணவு உண்டார்; அவர் நீண்ட நாள் வாழ்வார்.

24. தொகைச் சொற்களை அடையாளம் கண்டு தொடர் அமைக்க

(1) எழுகதிர் (2) மலை வாழ்வார்

25. கலைச்சொல் தருக : Modern Literature; Epic Literature

**குறிப்பு** : செவிமாற்றுத் திறனர்களுக்கான மாற்றுவினா

சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக.

தேன், பொன், மழை, விலங்கு

26. தீவக அணியின் வகைகள் யாவை?

27. சொற்களைப் பிரித்துப் பொருள் எழுதுக

(1) வருந்தாமரை (2) பலகைபொலி

28. தமிழ்ச் சொல் எழுதுக.

Gold biscuit, Answer sheet, Experiment, Repeat

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்** **2x3=6**

29. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

30. 'தலையைக் கொடுத்தேனும் தலை நகரைக் காப்போம்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

31. சுற்றுச் சூழலைப் பேணுவதே அறம்' – உரைக் குறிப்பு உருவாக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.** **2x3=6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

32. சங்க இலக்கியங்கள் காட்டும் அறம் இன்றும் தேவையானவையே! இதற்குச் சில சான்றுகள் தருக.

33. "எவையெல்லாம் அறியேன்" என்று கருணையன் கூறுகிறார்.

34. அடிபிறழாமல் எழுதுக:

'தென்னன் மகளே' – அன்னைமொழிப் பாடல்

(அல்லது)

'வெய்யோன் ஒளி' – எனும் கம்பராமாயணப் பாடல்

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.** **2x3=6**

35. வெண்பாவின் பொது இலக்கணம் எழுதுக.

36. தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக

37. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் **5x5=25**

38. (அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடு ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) இறைவன் புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் படித்த நூலுக்கான மதிப்புரை எழுதுக.

(அல்லது)

ஆ) மாவட்ட அளவில் நடைபெற்ற 'மரம்' எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டியில் வென்ற நண்பனுக்கு வாழ்த்து மடல் எழுதுக.

40. கொடுக்கப்பட்டுள்ள படக்காட்சியைக் கவினுறு கவிதை ஒன்று எழுதுக



41. கொடுக்கப்பட்ட நூலகச் சேர்க்கை விண்ணப்பத்தை நிறைவு செய்க.

42.

அ) தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக

The Golden Son gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clo start their wandering. The colorful Birds start twitting their morning melodies. In Percussions. The Butterflies dance around the Flowers fragrance. The flowers fills the breeze. The Breeze blows everywhere makes everything pleasant.

(அல்லது)

ஆ) வீட்டிலும் பள்ளியிலும் நீங்கள் நடந்துகொள்ளும்விதங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

**குறிப்பு :** செவிமாற்றுத்திறனர்க்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்துக்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைதருக.

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம்கூறு அவையம் பற்றி, "அ அறக்கண்ட நெறிமாண் அவையம்" என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகி அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலைமிக்கது என்கிறது.

i) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைநின்றவை யாவை?
ii) புறநானூறு அறங்கூறு அவையத்தை எவ்வாறு எடுத்துரைக்கிறது?
iii) தனிச்சிறப்புற்ற அறங்கூறவையம் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
iv) மதுரையின் அறங்கூறவையம் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
v) மதுரையின் அறங்கூறவையத்தின் சிறப்பு யாது?

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **3x8=24**

43. (அ).தமிழின் சொல் வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு எழுதுக.

(அல்லது)

(ஆ). செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

44. (அ).அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ)."அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" எனும் தலைப்பில் கதை ஒன்று எழுதுக.

45. (அ).உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

(ஆ).உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதால் சரிசெய்ய மின்வாரிய அலுவலர்க்குக் கடிதம் எழுதுக.